1968 மார்ச் 22]

*280 வினா—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன், திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.—

அண்மையில் திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற கலெக்டர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாநில நிர்வாகத்தைப் பற்றிய பல பொருட்கள் பொதுவாக விவாதிக்கப்பட்டன. முடிவுகள் உடனடியாக அங்கு எடுக்கப்படவில்லை. தேவைப்படும்பொழுது, மாநாட்டில் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு இணங்க அரசு முடிவு எடுக்கும்.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த மாநாட்டில் எந்த எந்த அமைச்சர்கள் கலந்துகொண்டார்கள்? அந்த மாநாட்டில் பெரிய ஜில்லாக்களை இரண்டாகப் பிரித்து, அந்த ஒவ்வொரு ஜில்லாவுக்கும் தனிக் கலெக்டர்கள் போடுவதைப்பற்றி தீர்மானிக்கப்பட்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தீர்மானிக்கப்படவில்லை, விவாதிக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இதிலே கொள்முதல் செய்வதைப்பற்றியும் விவாதிக்கப்பட்டதாகவும், ஒரு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வேண்டி அதன் மீது முடிவு எடுப்பதை பற்றியும் விவாதிக்கப்பட்டதாகவும் கூட பத்திரிகையிலே பார்த்தேன். அந்தக் கொள்முதல் எப்படி செய்யவேண்டுமென்ற அடிப்படையிலேயும், இந்த ஒரு படி அரிசித் திட்டத்தை நிறைவேற்றுவதைப் பற்றியும் ஏதாவது முடிவு செய்யப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இத்தகைய கேள்விகள் எல்லாம் எழுவதற்குக் காரணம் இருக்கிறது. கலெக்டர்கள் மாநாடு என்று பெயரிட்டிருப்பதாலே, வழக்கமாக அரசியல் கட்சிகள் மாநாடு நடத்துகிற பொழுது, இறுதியிலே சில குறிப்பிட்ட தீர்மானங்களை நிறைவேற்றி அதற்குப் பிறகு அவர்கள் செயல்படுவார்கள் ; அதைப்போல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கும் என்ற கருத்தின் அடிப்படையிலே இத்தகைய கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன. Conference என்பதற்கு to confer என்ற பொருளிலே தான் இந்த Conference இருந்தது. ஒருவருக்கொருவர் கலந்து உரையாடுவதும், பிரச்சினைகளைப் பற்றி ஆராய்வதும் தான் இந்த மாநாட்டினுடைய அடிப்படை நோக்கமாகும். அந்த முறையில் கனம் உறுப்பினர் அவர்கள் சொன்ன கொள்முதலபற்றிய பிரச்சினை கூட விவாதிக்கப்பட்டது.

திரு. கே. சகாதேவக்கவுண்டர் : மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்டங்களைப்பற்றி விவாதித்ததாகத் தெரிவித்துள்ளார்கள். அப்படி விவாதித்த பொழுது வட ஆர்க்காடு மாவட்டத்தையும் ஆராய்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கலெக்டர்கள் மாநாட்டிலே விவாதிப்பதற்கு ஏற்ற பெரிய மாவட்டங்களிலே ஒன்றுதான் வட ஆர்க்காடு மாவட்டம். வட ஆர்க்காடு மாவட்டம் மட்டும் அல்ல, எல்லா மாவட்டங்களையும் பற்றி அங்கே விவாதிக்கப்பட்டது.

THIRU K. VINAYAKAM : Apart from just conferring, was any regular agenda drawn up was any discussion carried on on the items in the agenda, what were the conclusions arrived at, what were the decisions taken, was the law and order situation discussed, was

the rupee-a-measure scheme discussed and what was the conclusion arrived at ? Is the Government going to implement those decisions or is the conference just an annual *tamasha* ?

THE HON. THIRU C. N. ANNADURAI : The seriousness of the question was marred by the last word. He could have avoided it.

THIRU K. VINAYAKAM : I am sorry.

THE HON. THIRU C. N. ANNADURAI : Because he has used that word, I can also say that the question itself is a *tamasha*. As for the query, I can say that all these problems were discussed. As for the conclusions arrived at, provisional conclusions were arrived at and they are subject to revision, rectification and finalisation

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, எற்கனவே முதலமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலில் கொள்முதல் பற்றி விவாதிக்கப்பட்டதாக வந்ததால், அங்கு ஒரு ஏக்கர் வைத்திருப்பவர்களுக்கும் "லெவி நோட்டீஸ்" தரப்படுகின்றது என்று கலெக்டர்களுக்குப் புகார் வந்ததாகத் தெரிவிக்கப்பட்டதா ? புகார் வந்தது என்றால், அதைப் பற்றி பரிசீலிக்கப்பட்டதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அப்படிப்பட்ட புகார்கள் என்னிடத்திலே வந்திருப்பதாலே, கலெக்டர்கள் மாநாட்டிலே நானே அதைப்பற்றி கேட்டேன். பல மாவட்டக் கலெக்டர்கள் அப்படி நாங்கள் வற்புறுத்தி யாரிடத்திலேயும் வாங்கவில்லையென்று தான் சொன்னார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : சபாநாயகர் அவர்களே, இது மாதிரி மாவட்ட கலெக்டர்களுடைய இந்த மாநாட்டிலே தீர்மானிக்கப்பட்டவைகளைப்பற்றியும், விவாதிக்கப்பட்டவைகள் பற்றியும் சட்டசபை முன்னாலே குறிப்புகள் வைக்க சர்க்கார் முன் வருவார்களா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அத்தகைய உத்தேசம் எனக்கு இப்பொழுது இல்லை.

அரசுப் பணியாளர்கள் ஊதியம்

*281 வினா—**திரு என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967 அக்டோபர் மாதம் தமிழ்நாடு அரசு அறிவித்தபடி அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட ஊதிய உயர்வால் அரசாங்கத்துக்கு ஏற்படும் செலவு எவ்வளவு ?

(இ) இந்த ஊதிய உயர்வால் பயனடைவோர் எத்தனை பேர் ?

(உ) பயன் அடையாதோர் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : மாநில அரசாங்கப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்கள், மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்கள்—ஆகியோரின் அகவிலைப்படியினை உயர்த்தி 1967 அக்டோபரில் அரசாங்கம் ஆணை வெளியிட்டது. மேலும் மாதச்சம்பளம் ரூ. 500-க்கு மேல் போகாத அரசாங்கப் பணியாளர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கும் திட்டத்தையும் அரசாங்கம் செயலுக்குக் கொண்டு வந்தது. அகவிலைப்படி வீதத்தினை உயர்த்தியதால் ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு சுமார் 7 கோடி ரூபாயாகும். நகர ஈட்டுப்படித் திட்டத்தினால் ஆண்டொன்றுக்குச் சுமார் 65 லட்சம் ரூபாய் செலவாகும்.